RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்
DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 251 | செப்டம்பர் 15, 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# நாடு முழுவதும் களைகட்டிய விநாயகர் சதுர்த்தி விழா.. பிரமாண்டமான சிலைகள் பிரதிஷ்டை செய்து பூஜை

சென்னை, செப்.15-

முழுமுதற் கடவுளான விநாயகப் பெருமான், ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தி தினத்தில் அவதரித்தார். இந்த நாள் விநாயகர் சதுர்த்தியாக கொண்டாடப்படுகிறது. அவ்வகையில் விநாயகர் சதுர்த்தி விழா, நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

விநாயகர் சதுர்த்தியையொட்டி கோவில்களில் விநாயகப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. சிறப்பு வழிபாடுகளில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த பக்தர்கள் திரளாக கலந்துகொண்டு விநாயகரை தரிசனம் செய்கின்றனர். இதனால் கோவில்களில் வழக்கத்தைவிட இன்று கூட்டம் அதிகமாக காணப்படுகிறது.

வீடுகளில் விநாயகர் வழிபாடு மேற்கொள்ளும் மக்கள், விநாயகர் சிலைகளை வைத்து அலங்கரித்து, விநாயகருக்கு பிடித்தமான கொழுக்கட்டை, மோதகம், லட்டு, அப்பம், அவல், பொரி, கடலை, சுண்டல் போன்ற நைவேத்யங்களை படைத்து பூஜை செய்கின்றனர்.

இதேபோல் கோவில்கள் சார்பிலும், பல்வேறு இந்து அமைப்புகள் சார்பிலும் பொது இடங்களில் பிரமாண்ட சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜை செய்யப்படுகின்றன. தமிழ்நாடு முழுவதும் சுமார் 1 லட்சம் விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளன. தலைநகர் சென்னையில் மட்டும் 1,562 சிலைகளை வைத்து வழிபட காவல்துறை அனுமதி வழங்கியிருக்கிறது. அந்த இடங்களில் காலை முதலே சிலைகள் பிரதிஷ்டை செய்து பூஜைகள் நடைபெறுகின்றன. சென்னை புறநகர்ப் பகுதிகளிலும் சுமார் 1500 சிலைகள் வரை நிறுவப்பட்டு வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன.

புகழ்பெற்ற பிள்ளையார்பட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில், விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு இன்று அதிகாலை கோவில் நடை திறக்கப்பட்டு சிறப்பு அபிஷேக மற்றும் ஆராதனைகள் நடைபெற்றன. மூலவர் ஸ்ரீ கற்பக விநாயகர் ராஜ அலங்காரமான தங்க கவச அலங்காரத்தில் எழுந்தருளி



பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார். தெப்பக்குளத்தில் அங்குசதேவருக்கு தீர்த்தவாரி நடைபெற்றது. மதியம் மூலவருக்கு முக்குறுணி மோதகம் படைக்கப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற உள்ளது. விநாயகரை தரிசனம் செய்வதற்காக அதிகாலையிலேய பக்தர்கள் குவிந்தனர். நேரம் செல்லச்செல்ல பக்தர்களின் வருகை அதிகரித்தது. பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து விநாயகரை வழிபடுகின்றனர்.

பக்தர்களின் வசதிக்காகவும், கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்தவும் கோவில் நிர்வாகம் மற்றும் காவல் துறை சார்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருச்சி உச்சி பிள்ளையார் கோவிலில் இன்று மாணிக்க அலங்காரத்தில் விநாயகர் அருள்பாலித்தார். திரளான பக்தர்கள் கோவிலுக்கு வருகை தந்து தரிசனம் செய்கின்றனர். கோவை முந்தி விநாயகர் கோவிலில் காலை முதலே பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தரிசனம் செய்கின்றனர்.

புதுச்சேரியில் உள்ள புகழ்பெற்ற மணக்குள விநாயகர் கோவிலில் அதிகாலை முதலே சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. அதிகாலை 4 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு, மூலவர் மற்றும் உற்சவருக்குப் பால், தயிர், இளநீர், பஞ்சாமிர்தம், சந்தனம், பன்னீர் உள்ளிட்ட 21 வகையான திரவியங்களால் சிறப்பு அபிஷேகமும் கலசாபிஷேகமும் செய்யப்பட்டது.

தொடர்ந்து மூலவர் விநாயகப் பெருமானுக்குத் தங்கக் கவசம் அணிவிக்கப்பட்டது. உற்சவர் விநாயகப் பெருமான் கற்பக விருட்ச அலங்காரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு வழங்குவதற்காக 16,000 லட்டுகள் தயார் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு நாடு முழுவதும் விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் கோவில்களில போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வழிபாடு முடிந்த பின்னர், காவல்துறையால் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச்சென்று நீர்நிலைகளில் கரைக்க உள்ளனர். சென்னையில் வருகிற 19 மற்றும் 20 ஆகிய நாட்களில் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்கள் வழியாக விநாயகர் ஊர்வலம் நடத்தி சிலைகளை கரைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதற்காக நாடு முழுவதும் உள்ள முக்கிய நீர்நிலைகளில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு விநாயகர் சிலைகள் மற்றும் பூஜைப்பொருட்கள் விற்பனை அமோகமாக நடைபெறுகிறது. குறிப்பாக, வீடுகளில் வைத்து வழிபடுவதற்காக சிறிய அளவிலான விநாயகர் சிலைகளை வாங்க மக்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

# ‘பெரியார் பிறந்தநாள் விழிப்புணர்வு பேரணிக்கு அனுமதி மறுப்பதா?’ : தினகரன் கண்டனம்

சென்னை: செப்.15-

“பெரியார் பிறந்தநாள் விழிப்புணர்வு பேரணிக்கு அனுமதி மறுப்பதா? அரசியலுக்காக பெரியாரை தங்களது கொள்கைத் தலைவர் என தவெக போடும் நாடகம் அம்பலமாகி உள்ளது” என அமமுக பொதுச்செயலாலர் டிடிவி தினகரன் காட்டமாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், “பெரியாரின் பிறந்தநாளான செப்டம்பர் 17-ம் தேதி, அவர் பிறந்த ஈரோட்டில் உள்ள பன்னீர்செல்வம் பூங்காவில் இருந்து பெரியார் இல்லம் வரை திராவிடர் கழகம் சார்பில் திட்டமிடப்பட்டிருந்த விழிப்புணர்வு பேரணிக்கு காவல்துறை அனுமதி மறுத்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே, கடந்த ஜூலை மாதம் நீட் தேர்வுக்கு எதிராக திராவிடர் கழகம் நடத்தவிருந்த



இருசக்கர வாகனப் பேரணிக்கு அனுமதி மறுத்தும், பெரியார் திடலில் காவல்துறையினரைக் குவித்தும் அடக்குமுறையைக் கையாண்ட தவெக அரசு, தற்போது அவரது பிறந்தநாளை முன்னிட்டு திட்டமிடப்பட்டிருந்த விழிப்புணர்வு பேரணிக்கும் அனுமதி மறுத்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

சமூக நீதி, சுய மரியாதை, பகுத்தறிவு, சாதி ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம் எனப் பல்வேறு கொள்கைகளுக்காகத் தனது வாழ்நாள் முழுவதும் போராடிய தந்தை பெரியாரின் பிறந்த நாளில், அவரது சொந்த மண்ணிலேயே அவரது கொள்கைகளை வலியுறுத்தி நடத்தப்படவிருந்த பேரணிக்கு அனுமதி மறுத்திருப்பதன் மூலம், பெரியாரை அரசியலுக்காக மட்டுமே தவெக தனது கொள்கைத் தலைவராக முன்வைத்திருப்பது அம்பலமாகியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பெரியாரின் பிறந்தநாளையொட்டி நடைபெறும் விழிப்புணர்வு பேரணிக்கு, இந்த ஆண்டு விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்களை காரணம் காட்டி அனுமதி மறுத்திருப்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

எனவே, பெரியாரை கொள்கைத் தலைவராக முன்மொழிந்திருக்கும் தவெக, அவரையும் அவரது பெயரையும் வெறும் அரசியலுக்காக மட்டுமே பயன்படுத்தும் நாடகத்தைக் கைவிட்டு, பெரியாரின் பிறந்தநாளன்று திராவிடர் கழகம் திட்டமிட்டிருந்த விழிப்புணர்வு பேரணிக்கு உடனடியாக அனுமதி வழங்கி, ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்திட வேண்டும் என்று இந்நேரத்தில் வலியுறுத்துகிறேன்” என்று டிடிவி தினகரன் கூறியுள்ளார்.



# மும்பையில் விநாயகர் சேவையில் முஸ்லிம் குடும்பம்: மதநல்லிணக்கத்துக்கு முன்னுதாரணம்

புதுடெல்லி: செப்.15-

மும்பையில் விநாயகர் சேவையில் ஒரு முஸ்லிம் குடும்பம் கடந்த 16 ஆண்டுகளாக ஈடுபட்டுள்ளது. இது, இந்து-முஸ்லிம் ஒற்றுமை மற்றும் மதநல்லிணக்கத்துக்கு முன் உதாரணமாகப் பார்க்கப்படுகிறது.

மும்பையில் பி.பி. மார்க் பகுதியில் விநாயகர் சதுர்த்தியை வருடந்தோறும் கொண்டாட ராஜா கணேஷ் மண்டல் எனும் அமைப்பு செயல்படுகிறது. இந்த அமைப்பில், மதத்தை விட மனிதாபிமானத்திற்கும் சமூக நல்லிணக்கத்திற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இந்த பி.பி மார்க்கில் ஒரு முஸ்லிம் குடும்பம் பல ஆண்டுகளாக விநாயகரின் சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. இந்த மண்டலின் தலைவராக அப்பாஸ் கான் எனும் ஒரு முஸ்லிம் தேர்வாகி உள்ளார்.

இவர், கடந்த 16 ஆண்டுகளாக கணேஷ் உத்சவத்துடன் இணைந்து செயல்பட்டு வருகிறார். இதை அவர் மிகுந்த பக்தியுடன் தனது பொறுப்புகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார். மும்பையின் கணேஷ் உத்சவம் என்பது வெறும் நம்பிக்கையைச் சார்ந்த திருவிழா மட்டும் அன்றி அது, சமூக ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தின் அடையாளம் என்பதை இது காட்டுகிறது.

கடந்த 2009ல் ராஜா கணேஷ் மண்டலின் பொறுப்பை ஏற்றது முதல், விநாயகர் விழாவை, வெறும் மத நிகழ்வாக மட்டும் பார்க்காமல், சமூக ஒற்றுமைக்கான ஒரு தளமாக மாற்ற அப்பாஸ் கான் பாடுபட்டு வருகிறார்.

பி.பி மார்க் மண்டலின் நிகழ்ச்சிகளில் அனைத்து மதங்கள் மற்றும் சமூகங்களைச் சேர்ந்த மக்களும் பங்கேற்கின்றனர். கணேஷ் உத்சவத்தின் போது, மண்டலின் சேவைகள், அலங்காரப் பணிகள் உள்ளிட்ட பலவற்றிலும் பல்வேறு தரப்பட்ட மக்களும் தங்கள் பங்களிப்பை வழங்குகின்றனர்.

அப்பாஸ் கானின் மனைவி ஹசீனா கானும் மண்டலின் பணிகளில் தீவிரமாகப் பங்காற்றி வருகிறார். கணேஷ் உத்சவத்திற்கான ஆயத்தப் பணிகள் முதல் பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் ஏற்பாடுகள் வரை அனைத்திலும் அவர் தனது கணவருக்கு முழு ஆதரவை அளிக்கிறார்.

இக்குடும்பத்தின் அடுத்த தலைமுறையினரும் இந்த மரபைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கின்றனர். அப்பாஸ் கானின் மகன் சாஹில் கானும் மண்டலின் செயல்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு, கணேஷ் உத்சவத்தை ஒருங்கிணைப்பதில் முக்கியப் பங்காற்றி வருகிறார்.

இதனால், பி.பி. மார்க் ராஜா கணேஷ் மண்டல் என்பது வெறும் கணேஷ் மண்டல் மட்டுமல்ல, அது இந்து-முஸ்லிம் சகோதரத்துவத்தின் ஒரு வாழ்வியல் சான்று என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். ஏனெனில், முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மண்டலில் ஆர்வத்துடன் பங்கேற்கின்றனர்.

மேலும், இந்து சமூகத்தைச் சேர்ந்த ஏராளமான தன்னார்வலர்களுடன் இந்நிகழ்வை வெற்றிகரமாக நடத்தத் தோளோடு தோள் நின்று முஸ்லிம்கள் பலரும் பணியாற்றுகின்றனர்.

நாட்டில் மதம் மற்றும் சமூகம் சார்ந்த விவகாரங்களைச் சுற்றி அரசியல் சூழல் நிலவுகிறது. இத்தகைய சூழலில், பி.பி. மார்க் ராஜா கணேஷ் மண்டல் வழங்கும் இந்தச் செய்திக்கு ஒரு சிறப்பான முக்கியத்துவம் உள்ளது.

மதங்கள் வேறுபட்டிருந்தாலும் இதயங்களும் உணர்வுகளும் மும்பையின் பி.பி மார்க்கில் ஒன்றுபட்டிருக்கிறது. ஒவ்வொரு வருடமும் கணேஷ் உத்சவத்தின் போது வெளிப்படும் இந்து-முஸ்லிம் ஒற்றுமை, இன்றைய சமூகத்திற்கு ஒரு உத்வேகமாக மாறியுள்ளது.

# தேமுதிக 22-ம் ஆண்டு துவக்க விழா - தொண்டர்களுக்கு பிரேமலதா கடிதம்

சென்னை: செப்.15-

தேமுதிகவின் 22-ம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தொண்டர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதில், “லஞ்சம், ஊழலுக்கு அப்பாற்பட்டு நேர்மையான வெளிப்படையான மக்கள் ஆட்சியை தர வேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காகத் தொடங்கப்பட்ட கட்சி நமது தேசிய முற்போக்கு திராவிட கழகம்.

நமது கட்சி தொடங்கி 21 ஆண்டுகள் நிறைவடைந்து. இன்று 22-ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம். பல ஆண்டுகள் ரசிகர் மன்றமாகவும் நற்பணி இயக்கமாகவும் செயல்பட்டு ரசிகர்களின் விருப்பதிற்கு ஏற்ப 2000-ம் ஆண்டு ரசிகர் மன்றதிற்கு கொடியை அறிமுகப்படுத்தினார்.

2005-ம் ஆண்டு மதுரை மாநகரில், நமது அன்புத் தலைவர் விஜயகாந்த் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தைத் தொடங்கினார். தொடர்ந்து, 2006-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மக்களுடனும் தெய்வத்துடனும் கூட்டணி வைத்து, 8.33 சதவீத வாக்குகளைப் பெற்று, விருத்தாசலம் சட்டமன்றத்



தொகுதியில் முதல் வெற்றியை பதித்தோம். 2009-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 10.38 சதவீத வாக்குகளைப் பெற்றோம்.

2011-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தேமுதிக சார்பில் 29 சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்று, நமது தலைவர் விஜயகாந்த் எதிர்க்கட்சித் தலைவர் ஆனார். கட்சி ஆரம்பித்து 6 ஆண்டுகளில் எதிர்க்கட்சி தலைவர் அந்தஸ்தை பெற்றது, தொண்டர்களின் உழைப்பால் நம் கட்சிக்கு கிடைத்த சாதனை. நமது கட்சி தொடங்கிய நாளிலிருந்து, கட்சி கொடியை தமிழ்நாடு முழுவதும் கொண்டு சேர்த்தவர்கள் நமது தேமுதிக தொண்டர்கள்.

தமிழ்நாடு முழுவதும் சுவர் விளம்பரங்கள் செய்து, சாதனை படைத்த நமது தொண்டர்களின் அர்ப்பணிப்பு என்றும் நினைவுகூரத்தக்கது. நமது கட்சி தொடங்கப்பட்ட நாள் தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் ஒரு மிகப்பெரிய சாதனை நாளாக அமைந்தது. அந்த மாநாட்டில் 28 லட்சம் பேர் கலந்து கொண்டது இன்றளவும் வரலாற்றுச் சாதனையாகப் பார்க்கப்படுகிறது.

என்றென்றும் நமக்குத் துணை நின்று, நம்மையும் நமது கழகத்தையும் வழிநடத்திய நமது அன்புத் தலைவர் விஜயகாந்தை வணங்கி, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளை நாம் அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாடுவோம். நமது தலைவர் எதற்காகக் கட்சியைத் தொடங்கினாரோ, அந்த லட்சியத்தையும் கொள்கைகளையும் வென்றெடுப்பதே நமது கடமையாகும். அதற்காக இந்த நாளில் நாம் அனைவரும் ஒன்றிணைத்து உறுதி மொழி ஏற்போம்.

முதல் முறையாக இந்த ஆண்டு 2026 நாடாளுமன்றதின் முதல் உறுப்பினரை பெற்றுள்ளோம். அதேபோல், இந்த ஆண்டு 2026 மீண்டும் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்று, விஜயகாந்தின் குரலை சட்டமன்றத்தில் மீண்டும் ஒலிக்கச் செய்துள்ளோம்!

நமது தலைவர் மனிதனாகப் பிறந்து, புனிதராக வாழ்ந்து, தெய்வமாக இருக்கிறார். அவரது புகழும் மனித நேயமும், மக்கள் மேல் அவர் கொண்டிருந்த பற்றும், பாசமும், கொள்கைகளும் மக்கள் மனதில் நிலைத்திருக்கும். அவர் வாழ்ந்தார், இருந்தார், வாழ்ந்து கொண்டே இருப்பார் அனைவரது மனதிலும்” என்று பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

# உதகையில் நடைபெற்றுவரும் முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளை விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு செயலாளர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



நீலகிரி, செப்.15-

நீலகிரி மாவட்டம் உதகை எச்.ஏ.டி.பி விளையாட்டு மைதானத்தில் சார்பில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை நடைபெற்று வரும் முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசுச் செயலாளர் சந்தீப் நந்தூரி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு ஆண்களுக்கான கால்பந்து போட்டியினை துவக்கி வைத்து, மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்று மாநில அளவிலான போட்டிகளிலும் கலந்து கொள்ள வேண்டுமென கூறி வீரர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசுச் செயலாளர் அவர்கள் எச்.ஏ.டி.பி விளையாட்டு மைதானத்தில், அமைந்துள்ள விளையாட்டு விடுதியினையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, விடுதியில் தங்கியுள்ள மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி, குறைகளை கேட்டறிந்தார்.

முன்னதாக, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசுச் செயலாளர் அவர்கள் உதகை, பட் பையர் ஸ்கேட் பார்க் பகுதியில் அமைந்துள்ள சக்கர பலகை (Skate board) விளையாட்டு மைதானத்தினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, சக்கர பலகை (Skate board) விளையாட்டு பயிற்சியில் பங்கேற்றவர்களிடம் கலந்துரையாடி இம்மைதானத்தினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட விளையாட்டு அலுவலர் .இந்திரா, அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# தற்காலிக செவிலியர் பணியிடங்களுக்கு தகுதியான நபர்கள் விண்ணப்பிக்கலாம்; என மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்



தேனி, செப்.15-

தேனி மாவட்டம் தற்காலிக செவிலியர் பணியிடங்களுக்கு தகுதியான நபர்கள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன். தகவல்தேனி மாவட்ட நலச்சங்கம் சார்பில் காலியாக உள்ள தற்காலிக செவிலியர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.இது குறித்து தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா. வைத்தியநாதன் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேனி மாவட்ட நலச்சங்கத்தின் கீழ் செயல்படும் மருத்துவப் பிரிவுகளில் காலியாக உள்ள தற்காலிக செவிலியர் பணியிடங்களுக்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பணியிடங்களுக்கு தேவையான கல்வித்தகுதி மற்றும் நிபந்தனைகள் குறித்த விவரங்கள் தேனி மாவட்டத்தின் இணையதளத்தில் https://theni.nic.in பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. எனவே இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியும் விருப்பமும் உள்ள விண்ணப்பதாரர்கள் மேற்கண்ட இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பினை முழுமையாகப் பார்வையிட்டு அதற்குரிய விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து வருகின்ற 25.09.2026-குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.குறிப்பிட்ட விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு காலக்கெடுவிற்குள் பெறப்படும்ஏ ற்றுக்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்கள்.



# முன் அனுமதியின்றி ஆர்ப்பாட்டம்: ஆ.ராசா, மா.சுப்பிரமணியன் மீது வழக்கு

சென்னை, செப்.15-

முன் அனுமதியின்றி ஆர்ப்பாட்டம் நடத்தியதாக திமுக-வைச் சேர்ந்த ஆ.ராசா, மா.சுப்பிரமணியன் உள்பட ஆயிரம் பேர் மீது சைதாப்பேட்டை போலீஸார் இரு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

நடந்து முடிந்த சட்டப்பேரவை கூட்டத்தொடரில் திமுக மற்றும் மறைந்த தலைவர் மு.கருணாநிதி உள்ளிட்டோரை முதல்வர் விஜய் விமர்சித்து பேசியதை கண்டித்து திமுக சார்பில் தமிழகம் முழுவதும் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை சைதாப்பேட்டையில், கலைஞர் வளைவு அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் திமுக துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா, தென் சென்னை எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன், முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் உள்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஆ.ராசா சர்ச்சைக்குரிய வகையில் முதல்வர் குறித்து விமர்சித்தார். இது விமர்சனங்களுக்கு உள்ளானது. இதுஒரு புறம் இருக்க சைதாப்பேட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு போலீஸார் அனுமதி வழங்கவில்லை.

இதையடுத்து, திமுக நிர்வாகிகளான ஆ.ராசா, மா.சுப்பிரமணியன் உள்பட போராட்டத்தில் கலந்து கொண்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மீது, தடையை மீறி சட்ட விரோதமாக கூடுதல், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துதல் ஆகிய இரு பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.



■ 12/9/26 அன்று முன்னாள் முதலமைச்சர் அதிமுக கழக பொதுச் செயலாளர் மாண்புமிகு எடப்பாடி பழனிச்சாமி அவர்களை சந்தித்து ஆதித்தமிழர் முன்னேற்றக் கழக தலைவர் நாகராசன் தலைமையில் தாராபுரம், மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலுக்கு ஆதித்தமிழர் முன்னேற்றக்கழகம் ஆதரவு தெரிவித்த போது *குண்டடம்* *காளிமுத்து மாவட்டசெயலாளர்* *தாராபுரம்* திருப்பூர்




# 'வேல்ஸ் ஆசிரியர் சிறப்பு விருது 2026' வழங்கும் விழா

பெரியபாளையம், செப்.15-

திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அருகே மஞ்சாங்காரனையில் உள்ள வேல்ஸ் மருத்துவக் கல்லூரி VMC ஆடிட்டோரியத்தில், வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் உயர் ஆராய்ச்சி நிறுவனம் (VISTAS) சார்பில் 'வேல்ஸ் ஆசிரியர் சிறப்பு விருது (Teachers Excellence Award ) 2026' வழங்கும் விழா நடைபெற்றது.

வேல்ஸ் மருத்துவ கல்வி குழுமத்தின் நிறுவனரும் வேந்தருமான டாக்டர் ஐசரி கே. கணேஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற விழாவில், இணை வேந்தர்கள் ஜோதி முருகன், ஆர்த்தி கணேஷ், குழுமத்தின் துணைத் தலைவர் பிரீதா கணேஷ், நாராயணசாமி, மற்றும் டீன் குமுதா லிங்கராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

1,000 ஆசிரியர்களுக்கு விருது விழாவில் தர்மபுரி தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், பசுமைத் தாயகம் அறக்கட்டளையின் தலைவருமான டாக்டர் சௌமியா அன்புமணி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்த 1,000 ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கினார்.

அவர் பேசியதாவது;

மாணவர்களின் செல்போன் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தவும், சிறார்களைப் பாதுகாக்கவும் சமூக வலைத்தளப் பயன்பாட்டிற்குத் தகுந்த வரைமுறைகளும் சட்டங்களும் தேவை. பெற்றோர்கள் சொல்வதை விட ஆசிரியர்கள் சொல்வதையே மாணவர்கள் அதிகம் கேட்பார்கள். எனவே, நீர்நிலைகளைப் பாதுகாப்பது மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்து ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்றுத் தர வேண்டும்.

பெண்கள் உயர்கல்விக்காக வெளிமாநிலங்களுக்குச் சென்று படிக்கத் தயங்கும் நிலையில், அருகிலேயே பெரிய கல்வி நிறுவனங்களை உருவாக்கும் கல்வித் தந்தைகள் ஆசிரியர்களைப் போலவே போற்றுதலுக்கு உரியவர்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக, மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள சிவன் கோவிலில் சௌமியா அன்புமணி சாமி தரிசனம் செய்தார்.

இந்நிகழ்ச்சியில் பாட்டாளி மக்கள் கட்சி திருவள்ளூர் வடக்கு மாவட்டச் செயலாளர் வி.எம். பிரகாஷ், முன்னாள் மாவட்டச் செயலாளர் செல்வராஜ், பசுமைத் தாயகம் சுதாகர், மல்லியன் குப்பம் செல்வம். மற்றும் முக்கிய நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



# காவேரிப்பட்டினம் தாம்சன் பேட்டையில் 26ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா கோலாகலம்

கிருஷ்ணகிரி, செப்.15-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தாம்சன் பேட்டையில் 26ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா இன்று கோலாகலமாக நடைபெற்றது.

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, 10 அடியில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகருக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, சிறப்பு பூஜைகள் மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன. வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட விநாயகர் சிலை பக்தர்களை வெகுவாக கவரும் வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது.

காலை முதலே அப்பகுதியைச் சேர்ந்த பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு விநாயகரை தரிசனம் செய்து வழிபட்டனர். விழாவையொட்டி பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து சிறப்பு பூஜைகள், வழிபாடுகள் மற்றும் பல்வேறு விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் அப்பகுதி பொதுமக்கள், இளைஞர்கள் மற்றும் பக்தர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

26ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழாவிற்கான ஏற்பாடுகளை ஸ்பெஷல் பாய்ஸ் குழுமத்தினர், மற்றும் குடும்பத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# சிட்லபாக்கத்தில் 23 ஆயிரம் விநாயகர் சிலைகளுடன் 20ம் ஆண்டு விநாயகர் கண்காட்சி; அமைச்சர் சரத்குமார் துவக்கி வைத்தார்



சிட்லபாக்கம், செப்.15-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த குரோம்பேட்டை, ராதாநகர், கிருஷ்ணமாச்சாரி தெருவை சேர்ந்தவர் சீனிவாசன்.

கட்டிட கலை நிபுணரான இவர் தீவிர விநாயகர் பக்தர்.

இவர் கடந்த 19 ஆண்டுகளுக்கும் மேலாக ஆயிரகணக்கான விநாயகர் சிலைகளை சேகரித்து பொதுமக்களுக்கு இலவசமாக கண்காட்சி நடத்தி வருகிறார்.

இந்நிலையில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு தாம்பரம் அடுத்த சிட்லபாக்கம், காந்தி தெருவிலுள்ள ஸ்ரீ லக்ஷ்மி ராம் கணேஷ் மஹாலில் 23 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகளுடன் கூடிய 20ம் ஆண்டு விநாயகர் கண்காட்சி இன்று செப்டம்பர் 14ம் தேதி துவங்கி, செப்டம்பர் 24ம் தேதி வரை என 10 நாட்கள் நடைபெற உள்ளது.

இந்த கண்காட்சியை மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் த.சரத்குமார் ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இதுகுறித்து கண்காட்சி அமைப்பாளர் சீனிவாசன் கூறுகையில் :

விநாயகர் சிலைகள் கண்காட்சி செப்டம்பர் 24ம் தேதி வரை 10 நாட்கள் நடைபெற உள்ளது.

இந்த கண்காட்சி மக்கள் பார்வைக்கு இலவசமாக அனுமதிக்கப்படுகிறது.

காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 7 மணி வரை பொதுமக்கள் கண்காட்சியை பார்வையிடலாம்.

20வது ஆண்டு விநாயகர் சிலைகள் கண்காட்சியில் எல்லா விதமான விநாயகர்களும் வைக்கப்பட்டுள்ளது.

மனிதனின் அன்றாட வாழ்க்கையில் நடைமுறையில் உள்ள அன்றாட சாத்தியமா னவைகள் என்னென்ன உள்ளதோ அவை அனைத்தும் செய்துள்ளோம்.

விநாயகர் நடந்து வந்தால் எவ்வாறு இருக்கும், குளித்தால் எவ்வாறு இருக்கும், படுத்து இருந்தால் எவ்வாறு இருக்கும், தாயின் கருவறையில் இருந்தால் எப்படி இருக்கும், சிற்பிக்குள் முத்து இருந்தால் அந்த முத்து பிள்ளையாராக இருந்தால் எப்படி இருக்கும் என்பதை மையமாக வைத்து விநாயகர்கள் வைக்கப்பட்டுள்ளது. டென்னிஸ் விளையாடும் விநாயகர், அருவியில் குளிக்கும் விநாயகர், 10 அடி உயர அரச மர வேர்களால் உருவான பசுமை விநாயகர், அன்ன வாகனத்தில் பறக்கும் விநாயகர், ஏஐ விநாயகர், தேரில் வரும் விநாயகர், அந்தத் தேர் தன்னைத் தானே சுத்தி வந்தால் எவ்வாறு இருக்கும்.

ஒரு விநாயகர் சகல தெய்வங்களின் உருவத்திலும் நவகிரகங்களின் ரூபத்திலும் தட்சணாமூர்த்தி ரூபத்திலும் இருந்தால் எவ்வாறு இருக்கும் அதுபோன்ற வித்தியாசமான விநாயகர்கள் வைக்கப்பட்டுள்ளது.

வீட்டில் உபயோகப்படுத்தக்கூடிய பல்பு, டியூப் லைட், பூச்செண்டு அதில் எல்லாம் விநாயகர் இருந்தால் எவ்வாறு இருக்கும் என்பதை யோசித்து விநாயகர்கள் வைக்கப்பட்டுள்ளன.

ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் மூலமாக நிலாவில் விநாயகர் வருவது போலவும், பல்வேறு கற்பனைகளை கொண்டு விநாயகர்களை உருவாக்கி வித்தியாசமாக அமைத்துள்ளோம்.

சபரிமலை ஐயப்பன் கோவில், கள்ளிக்கோட்டை விநாயகர் கோவில்,

மலைக்கோட்டை விநாயகர் கோவில் போன்று பல்வேறு மினியேச்சர் விநாயகர் செய்யப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சியை காண வரும் பொது மக்களுக்கு அனுமதி இலவசம் இதில் விநாயகரின் தரிசனம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும்.

இதில் வரக்கூடிய பொதுமக்கள் கடமைக்கு கண்காட்சியை காண வரக்கூடாது.

இந்த கண்காட்சியில் பல தத்துரூபங்கள் மனிதனின் அன்றாட வாழ்க்கைகள் அடங்கிய விநாயகர் கண்காட்சியாக இதை அமைத்துள்ளோம்.

வரக்கூடியவர்கள் மிகவும் உன்னிப்பாக இந்த கண்காட்சியை காண வரவேண்டும் என பொதுமக்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

## திண்டுக்கல் மாவட்டம் பழனியில், விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு

# தமிழக வெற்றிக் கழகம் சார்பில் சிறப்பு அபிஷேகம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது



திண்டுக்கல், செப்.15-

திண்டுக்கல் மாவட்டம், பழனி புது தாராபுரம் ரோட்டில் அமைந்துள்ள அரசரடி விநாயகர் கோவிலில், விநாயகர் சதுர்த்தி விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

பழனி நகர 5-வது வார்டு, தமிழக வெற்றிக் கழக செயற்குழு உறுப்பினர் இளவரசன் நந்தினி ஏற்பாட்டில், விநாயகர் சிலைக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, சிறப்பு பூஜைகள் மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன.

மேலும் அத்தெருவில் உள்ள இளைஞர்கள் ஒன்றிணைந்து வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பிரம்மாண்ட விநாயகர் சிலையை அமைத்திருந்தனர். இந்த சிலை பக்தர்களை வெகுவாக கவர்ந்தது.

காலை முதலே அப்பகுதியை சேர்ந்த திரளான பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு விநாயகரை தரிசனம் செய்தனர். தொடர்ந்து பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் மற்றும் 500-க்கு மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

விழாவில் அப்பகுதி பொதுமக்கள், இளைஞர்கள் மற்றும் பக்தர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



# கல்லல் துளிர் இல்லங்களில் தேசிய பொறியாளர் தின விழா

கல்லல்: செப்-15

சிவகங்கை மாவட்டம் கல்லலில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் ஒரு பகுதியாக செயல்பட்டு வரும் கல்லல் துளிர் விக்ரம் சாராபாய், சர் சி.வி. ராமன் மற்றும் முத்துலட்சுமி ரெட்டி துளிர் இல்லங்கள் சார்பில் தேசிய பொறியாளர் தின விழா கொண்டாடப்பட்டது.

கல்லலில் செயல்பட்டு வரும் இந்த துளிர் இல்லங்களில் சுமார் 60-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் உறுப்பினர்களாக உள்ளனர். அறிவியல் அறிஞர்களின் பிறந்த தினங்கள், அறிவியல் தினங்கள் மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகள் குறித்து குழுவாக விவாதிப்பது துளிர் இல்லங்களின் முக்கிய நோக்கமாக இருந்து வருகிறது. விழாவிற்கு தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சிவகங்கை மாவட்ட செயலாளர் பிரபு தலைமை தாங்கி உரையாற்றினார். அப்போது, பாரத ரத்னா விருது பெற்ற பொறியாளர் விஸ்வேஸ்வரய்யாவின் பிறந்த நாள் ஏன் தேசிய பொறியாளர் தினமாகக் கொண்டாடப்படுகிறது, அவர் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டிய கிருஷ்ணராஜசாகர் அணை மற்றும் அவரது முக்கிய அறிவியல், பொறியியல் சாதனைகள் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் கருத்தாளராக கலந்து கொண்ட தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர் புலவர் காளிராசா, உடலியல் அறிஞரும் உளவியலாளருமான இவான் பாவ்லோவ் மேற்கொண்ட இயல்பு தூண்டல் கற்றல் ஆராய்ச்சி, உணவு செரிமானம் மற்றும் உமிழ்நீர் சுரப்பு தொடர்பான ஆய்வுகள், மருத்துவத்திற்கான நோபல் பரிசு மற்றும் அவரது பிரபலமான நாய் பரிசோதனை குறித்து விளக்கினார். மாணவ, மாணவிகள் எழுப்பிய பல்வேறு வினாக்களுக்கு விருந்தினர்கள் பதிலளித்தனர். முத்துலட்சுமி துளிர் இல்ல பொறுப்பாளர் சித்திரைசெல்வி வரவேற்றார். துளிர் இல்ல செயலாளர் மாணவி விஜயலட்சுமி நன்றி கூறினார். துளிர் இல்ல தலைவர்கள் சஞ்சய் குமார், ஷாஜித்கான், செயலாளர்கள் சரண்யா, இராஜ கணபதி, சுபாஷ், பொருளாளர்கள் ரக்ஷினி, சரவண பிரவின், தியானேஷ் உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# பணி வரன்முறை செய்ய கோயில் தொழிலாளர்கள் சங்கம் கோரிக்கை

சென்னை, செப்.15-

புதிய பணியாளர் தேர்வு வாரியம் அமைப்பதற்கு முன் தினக்கூலி, தொகுப்பூதிய ஊழியர்களை பணி வரன்முறை செய்ய வேண்டும் என கோயில் தொழிலாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.



இதுகுறித்து தமிழ்நாடு திருக்கோயில் தொழிலாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: நடந்து முடிந்த சட்டப்பேரவை கூட்டத்தொடரில் அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் போது கோயில்களில் பணி புரிந்து வரும் தற்காலிக தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய பணியாளர்களை பணி வரன்முறை செய்வதற்கு அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்த்தோம்.

ஆனால், அதுதொடர்பான அறிவிப்பு வெளியாகவில்லை. இதனால், தினக்கூலி, தொகுப்பூதிய பணியாளர்கள் 1,500 பேர் மட்டும் அல்லாமல், அவர்களின் குடும்பத்தினர் சுமார் 10 ஆயிரம் பேரும் விரக்தியில் உள்ளனர்.

சட்டப்பேரவை அறிவிப்பில் கோயில்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் நேரடி நியமனக் காலிப் பணியிடங்களுக்கு வெளிப்படைத் தன்மையுடன் தகுதியானவர்களை தேர்வு செய்ய புதிய பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்படும் என அமைச்சர் அறிவிப்பு வெளியிட்டார்.

இதனை வரவேற்கிறோம். புதிதாக கோயில் பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்பாக தற்போது தினக்கூலி, தொகுப்பூதிய பணியாளர்களாக பணிபுரிந்து வரும் 1,500 பணியாளர்களை பணி வரன்முறை செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தீயணைப்பு துறை சார்பில் பருவமழை பேரிடர் விழிப்புணர்வு

கும்மிடிப்பூண்டி, செப்.15-

கும்மிடிப்பூண்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கும்மிடிப்பூண்டி தீயணைப்பு நிலையம் சார்பில் பருவமழை காரணமாக ஏற்படும் பேரிடர்களில் இருந்து தப்பிக்கும் வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. பள்ளி தலைமை ஆசிரியர் லதா தலைமை தாங்கினார். திருவள்ளூர் மாவட்ட தீயணைப்பு அலுவலர் லோகநாதன் உத்தரவின் பேரில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில் உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர் வில்சன் ராஜ்குமார் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றார்.

பள்ளி மாணவர்கள் மத்தியில் பேசிய கும்மிடிப்பூண்டி தீயணைப்பு நிலைய அலுவலர் ஜெயச்சந்திரன், பருவமழை காரணமாக ஏற்படும் மழை வெள்ளம் குடியிருப்புகளை சூழ்ந்தால் அதிலிருந்து தப்பிக்கும் முறைகள் குறித்தும், வீட்டில் பயன்படுத்தி வீசும் பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் கேன்கள் போன்றவற்றை பயன்படுத்தி தப்பிக்கும் முறைகள் குறித்து விளக்கினார். தொடர்ந்து சிறப்புரை ஆற்றிய உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர் எஸ்.வில்சன் ராஜ்குமார், பருவ மழை காலங்களில் மின் கம்பங்களை கைகளால் தொடக்கூடாது, ஈரமான கைகளால் மின்சாதன பொருட்களை தொடக்கூடாது.

மழைக்காலங்களில் இடி, மின்னல் நேரத்தில் செல்போனில் பேசக்கூடாது. மரங்களின் கீழே ஒதுங்க கூடாது, என்றார். மேலும், விஷமுள்ள மற்றும் விஷமற்ற பாம்புகளை குறித்து விளக்கியவர் அனைத்து மாணவிகளும் இந்த விழிப்புணர்வு தகவல்களை அவர்களது பெற்றோருக்கும், நண்பர்களுக்கும் தெரிவிக்க வேண்டும், என்று கேட்டுக் கொண்டார். தொடர்ந்து, தீயணைப்பு துறையின் உதவி தேவைப்படும்போது 112 என்கின்ற அவசர கால தொடர்பு எண்ணை பயன்படுத்திக் கொள்ளவும் அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, கும்மிடிப்பூண்டி தீயணைப்பு நிலையத்தின் சிறப்பு மீட்பு படை குழுவை சேர்ந்த 15 பேர் தீயணைப்புத் துறையினர் பயன்படுத்தும் பல்வேறு வகையான மீட்பு உபகரணங்கள் குறித்து செயல்முறை விளக்கம் அளித்தனர். மேலும், மாணவிகள் தீயணைப்பு துறையினர் பயன்படுத்தும் அனைத்து உபகரணங்களையும் பார்வையிட்டு அவர்களது சந்தேகங்களை தீயணைப்பு துறையினரிடம் கேட்டு தெரிந்து கொண்டனர்.

# அஜித் விஜய் சந்திப்பு: விரைவில் உலகத்தரமான 'மோட்டார் ஸ்போர்ட்ஸ் சிட்டி' - அமைச்சர் ஆதவ் அர்ஜூனா உறுதி

சென்னை, செப்.15-

முதலமைச்சர் விஜய்யுடன் இங்கிலாந்தில் நடைபெற்ற 'லீ மான்ஸ் கோப்பை' தொடரில் பங்கேற்ற நிலையில், தமிழ்நாட்டில் உலகத்தரமான மோட்டார் ஸ்போர்ட்ஸ் சிட்டி (Motor Sports City) விரைவில் அமைக்கப்பட உள்ளதாக அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.



தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கவும், உலகளாவிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்ளவும் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய், செப்டம்பர் 10-ஆம் தேதி, இங்கிலாந்து தலைநகர் லண்டன் சென்றார்.

இந்த பயணத்தின் ஒரு பகுதியாக, இங்கிலாந்தின் நார்தாம்ப்டன்ஷையரில் உள்ள உலகப் புகழ்பெற்ற சில்வர்ஸ்டோன் ஓடுதளத்திற்கு (Silver-stone Circuit) சென்ற முதலமைச்சர், உலகப்புகழ் பெற்ற லீ மான்ஸ் கோப்பை கார் பந்தயத்தை தொடங்கி வைத்தார். லீ மான்ஸ் கோப்பை நிர்வாகத்தின் அழைப்பை ஏற்று இந்த சர்வதேச நிகழ்வில் அவர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

முதலமைச்சருடன் இந்நிகழ்வில் பங்கேற்ற அனுபவம் குறித்தும், தமிழ்நாட்டில் Motor Sports-ஐ தமிழ்நாட்டில் வளர்ப்பது குறித்தும் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

அதில், "மோட்டார் விளையாட்டின் உச்சபட்சமாக இருக்கும் 'Formula One' உலக சாம்பியன்ஷிப் போட்டி, 1950ஆம் ஆண்டு இங்கிலாந்தில் உள்ள சில்வர்ஸ்டோன் சர்க்யூட்டில் நடைபெற்றது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் நேற்று முன்தினம் (செப்டம்பர் 12) நடைபெற்ற 'The Le Mans Cup - Silver-stone Round' போட்டியில் தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு இந்நிகழ்வை தொடங்கி வைத்த முதல் இந்தியர் என்ற பெருமையைக் கொண்டார்.

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற திரைத்துறை நட்சத்திரமும், மோட்டார் விளையாட்டு வீரரும் எனது அன்புக்குரிய சகோதரருமான அஜித் குமாரின் சிறப்பு அழைப்பின் பேரில் இப்பயணத்தில் பங்கேற்றோம்.

'Motor Sports' மீதான அவரின் ஆர்வமும், தமிழ்நாட்டில் இந்த விளையாட்டை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற அவரது தொலைநோக்குத் திட்டங்களும் நம்மை மிகவும் கவர்ந்தன. மோட்டார் விளையாட்டின் ஒவ்வொரு நுணுக்கங்களையும் அதன் பிரமாண்டத்தையும் அவர் பொறுமையாகவும் அர்ப்பணிப்புடனும் நம்மிடம் விளக்கினார்.

முன்னாள் இந்திய 'Formula One' வீரர் நரேன் கார்த்திகேயனும் உடனிருந்தார். தொடர்ந்து, இதுசார்ந்த உலகின் முன்னணி தொழில், வணிக மற்றும் விளையாட்டுத்துறைத் தலைவர்களுடன் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டோம். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) உறுப்பினர் செயலாளர் ஜே. மேகநாத ரெட்டியும் இப்பயணத்தில் பங்கேற்றார்.

'நம் தமிழ்நாட்டில் உலகத்தரமான உள்கட்டமைப்பை அடித்தளமாக மேற்கொண்டு சர்வதேச தரத்திலான விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும்' என்பதே தமிழ்நாடு அரசின் உறுதியான நிலைப்பாடாகும். இதன்பொருட்டு, தமிழ்நாட்டில் உலகத்தரமான 'Motor Sports City' விரைவில் அமையப்பெற உள்ளது.

முதலமைச்சருடன் இணைந்து தமிழ்நாட்டை முதன்மையாகக் கொண்டு, இந்தியா முழுவதற்கும் சர்வதேச அளவிலான Sports Economy-ஐ உருவாக்குவதற்கான பல புதிய தேடல்கள், கற்றல்கள், புதிய பார்வைகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டோம்.

முதலமைச்சர் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இப்பயணம், தமிழ்நாட்டின் விளையாட்டு வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமையும். தமிழ்நாடு விளையாட்டு கட்டமைப்பிலும் விளையாட்டுப் பொருளாதாரத்திலும் தலைசிறந்து விளங்கி, இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரமாக உருவாகும். மேலும், தமிழக விளையாட்டுத்துறையை நவீனமயமாகவும் உலக நாடுகளுக்கு இணையாகவும் உருவாக்க வேண்டிய பல்வேறு புதிய செயல்திட்டங்களை இப்பயணத்துடன் மேற்கொண்டு வருகிறோம்" என தெரிவித்துள்ளார்.

# கிருஷ்ணகிரியில் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி மிலாடி நபி விழா குழுவினர் அன்னதானம்

கிருஷ்ணகிரி, செப்.15-

கிருஷ்ணகிரி நகரில் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில், தொடர்ந்து 16-வது ஆண்டாக மிலாடி நபி விழா குழு சார்பில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.





மிலாடி நபி விழா குழுத் தலைவர் என்.அஸ்லம் தலைமையில், இஸ்லாமிய சகோதரர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கிருஷ்ணகிரி புதுப்பேட்டையில் அமைந்துள்ள வரசித்தி விநாயகர் கோவிலுக்கு பூஜைப் பொருட்களை வழங்கினர். தொடர்ந்து கோவில் வளாகத்தில் அன்னதானமும் நடைபெற்றது.

அனைத்து மதத்தினரும் சகோதரத்துவத்துடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என்ற நல்லிணக்கச் செய்தியை வெளிப்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்வு, பொதுமக்களிடையே வரவேற்பைப் பெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சிறுபான்மை நல உரிமைப் பிரிவு மாவட்ட துணை அமைப்பாளர் ரியாஸ், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் கராமத், நதீம், ஷப்பீர், ஆசிப், நவீத், ஜாபீர் உள்ளிட்ட இஸ்லாமிய சகோதரர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# "கேடு கெட்ட த.வெ.க., ஆட்சி.." தி.மு.க., எம்.பி. கனிமொழி கடும் கண்டனம்!

சென்னை, செப்.15-

மாணவர் தமிழ்ச்செல்வன் மரணத்திற்கு நீதி கேட்டுப் போராடிய பொதுமக்கள் மீதான காவல்துறை அடக்குமுறைக்குத் திமுக எம்.பி. கனிமொழி கண்டனம் தெரிவித்துள்ளார்.

மாணவர் தமிழ்ச்செல்வன் உயிரிழந்த விவகாரத்தில் நீதி கேட்டுப் போராட்டத்தில் ஈடுபட்ட உறவினர்கள் மற்றும் பொதுமக்களைக் குறிவைத்துக் காவல்துறை அடக்குமுறையை ஏவியுள்ளதாகக் கனிமொழி எம்.பி. கடுமையாகச் சாடியுள்ளார்.



மாணவன் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டதற்கான தெளிவான தடயங்கள் உள்ள நிலையிலும், உண்மைக் குற்றவாளிகளைக் கைது செய்வதை விடுத்து, நியாயம் கேட்டுப் போராடிய பொதுமக்களைக் கைது செய்வது வண்டிக்கத்தக்கது எனக் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதி கோருவோருக்கும் ஆதரவாக இருக்க வேண்டிய அரசு, அவர்களை ஒடுக்கும் செயலில் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டியுள்ள அவர், தவெக அரசின் இத்தகைய நடவடிக்கைக்குத் தனது கடும் எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளார்

# 'த.வெ.க-வில் இருந்து 1 ரூபாய் கூட பெறவில்லை' - மதுராந்தகம் இடைத்தேர்தல் வேட்பாளர் அறிமுக நிகழ்வில் மரகதம் பேச்சு

சென்னை, செப்.15-

தமிழக வெற்றிக் கழகத்தில் இணைவதற்காக ஒரு ரூபாய் கூட தான் பெறவில்லை என மதுராந்தகம் இடைத்தேர்தல் த.வெ.க வேட்பாளர் மரகதம் குமாரவேல் உறுதிபட தெரிவித்துள்ளார்.



த.வெ.க தலைமையிலான மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி சார்பில் மதுராந்தகம் (தனி) சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் த.வெ.க வேட்பாளர் அறிமுகக் கூட்டம் மதுராந்தகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட தவெக பொதுச்செயலாளரும், அமைச்சருமான என். ஆனந்த், வேட்பாளர் மரகதம் குமரவேலை அறிமுகம் செய்து வைத்து ஆதரவுத் திரட்டினார்.

அப்போது த.வெ.க கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மத்தியில் பேசிய வேட்பாளர் மரகதம் குமரவேல், "தான் அ.தி.மு.க-வில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியுள்ளேன். ஒன்றியக்குழு உறுப்பினர், ஒன்றியக்குழு தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்துள்ளேன். 2021-ஆம் ஆண்டு மதுராந்தகம் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றேன். எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்ததால் தொகுதி மக்களின் பல்வேறு கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை.

அ.தி.மு.க-வில் இருந்து விலகியது தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகிறது. தமிழக வெற்றிக் கழகத்தில் இணைவதற்காக தனக்கு பணம் வழங்கப்பட்டதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறானது. தமிழக வெற்றிக் கழகத்திடம் இருந்து ஒரு ரூபாய் கூட நான் பெறவில்லை. மதுராந்தகம் தொகுதி மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும், வளர்ச்சிப் பணிகளைக் கொண்டு வர வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில்தான் தவெகவில் இணைந்தேன்.

பண ஆசை எனக்கு இல்லை, தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்த இரண்டு மாதங்களிலேயே துணைப் பொதுச்செயலாளர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இங்கு சாதி, மத பாகுபாடு கிடையாது. அனைவரும் சமமாக நடத்தப்படுகின்றனர். மேலும் மதுராந்தகம் தொகுதி மக்களுக்காகத் தொடர்ந்து உழைத்து, இடைத்தேர்தலில் வெற்றி பெற்று அந்த வெற்றியை தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்க்கு சமர்ப்பிக்க வேண்டும்" என்றார்.

அதைத் தொடர்ந்து பேசிய அமைச்சர் என். ஆனந்த், "மதுராந்தகம் தொகுதியின் வேட்பாளர் மரகதம் குமரவேல், தொகுதி மக்களின் பிரச்சனைகளுக்காகத் தொடர்ந்து உழைத்து வருபவர். சாலை, கால்வாய் உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சனைகள் தொடர்பாக அதிகாரிகளை நேரடியாக தொடர்பு கொண்டு அவற்றுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுத்து வருகிறார். எனவே, அவர் ஏற்கனவே இந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதைப் போலவே, இப்போதும் அவரை மக்கள் ஆதரிக்க வேண்டும்.

தமிழக வெற்றிக் கழகம் தனித்து போட்டியிட்டபோதும் மக்கள் ஆதரவு அளித்தனர். தற்போது கூட்டணி கட்சிகள் நம்முடன் உள்ளனர். எனவே, மதுராந்தகம் தொகுதியில் மரகதம் குமரவேலின் வெற்றி உறுதி. மேலும் தமிழக வெற்றிக் கழகத்தில் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர், மாவட்டச் செயலாளர் என்ற பாகுபாடு கிடையாது. தலைவர் விஜய் என்ன உத்தரவிடுகிறாரோ, அதை செயல்படுத்துவதுதான் எங்களுடைய பணி. நாங்கள் அரசியல்வாதிகள் அல்ல; மக்களுக்கு சேவை செய்யும் ஊழியர்கள்.

மக்கள் நம்பிக்கையை ஒருபோதும் ஏமாற்ற மாட்டோம். தவறு, லஞ்சம், ஊழல் ஆகியவற்றில் ஈடுபட மாட்டோம். முதலமைச்சர் விஜய், மதுராந்தகம் தொகுதிக்கு வந்து மக்களைச் சந்திப்பார்" எனத் தெரிவித்துள்ளார்.

## கல்விப்பணியில் அர்ப்பணிப்பு: ஆசிரியர் அ.தீபாவுக்கு “நவரத்தினா கல்விச்செம்மல்” விருது

சிவகங்கை, செப்.15-

கல்வி வளர்ச்சிக்காக தொடர்ந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையில் வழங்கப்படும் “நவரத்தினா கல்விச்செம்மல் விருது 2026”, சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை ஒன்றிய ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி இடைநிலை ஆசிரியர் அ. தீபா அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.




திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியில் செயல்பட்டு வரும் பசுமை வாசல் பவுண்டேஷன் சார்பில், செப்டம்பர் 5 ஆசிரியர் தினத்தை முன்னிட்டு சிறந்த ஆசிரியர்களை பாராட்டும் வகையில் இணையவழி விருது நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் கல்வி வளர்ச்சிக்காக ஆற்றிவரும் தொடர்ச்சியான பணிகள், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் மற்றும் கல்விப்பணியில் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவது ஆகியவற்றை பாராட்டி ஆசிரியர் அ. தீபாவுக்கு “நவரத்தினா கல்விச்செம்மல் விருது 2026” வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வழங்கப்பட்டுள்ள இவ்விருது, கல்வித்துறையில் தொடர்ந்து சிறப்பாக பணியாற்றி வரும் ஆசிரியர் அ. தீபாவின் சேவைக்கு கிடைத்த சிறப்பான அங்கீகாரமாக அமைந்துள்ளது.






## கால்நடை பராமரிப்பு அமைப்பின் மாநில செயற்குழு கூட்டம்; சிவகங்கையில் நடைபெற்றது

சிவகங்கை, செப்.15-

‘சிவகங்கையில் கால்நடை பராமரிப்பு அமைப்பின் மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட நிர்வாகிகள் மற்றும் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் ஆபத்து ஈட்டுப்படி, நிலை2, நிலை 1 மற்றும் கால்நடை ஆய்வாளர் பயிற்சி2க்கு கால்நடை பராமரிப்பு உதவியாளர்களை தேர்வு செய்வது உள்ளிட்ட பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், கால்நடை பராமரிப்பு உதவியாளர் சங்கங்களை ஒருங்கிணைத்து ஒரே சங்கமாக செயல்படுவது குறித்தும் தீர்மானிக்கப்பட்டது. இதுதொடர்பாக மற்ற சங்கங்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக தனி குழு அமைக்கவும் மாநில செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தின் போது சிவகங்கை மாவட்ட உறுப்பினர்களுக்கு உறுப்பினர் அட்டைகள் வழங்கப்பட்டன. மேலும், சிவகங்கை மற்றும் திருவண்ணாமலை மாவட்ட செயலாளர்களிடமிருந்து சந்தா தொகை முன்பணமாக பெறப்பட்டது.

இந்தத் தகவலை மாநில பொதுச் செயலாளர் கே. காமராஜ் தெரிவித்துள்ளார்.

## பிரதம மந்திரியின் கல்வி உதவித்தொகை திட்டம்: தகுதியான மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

சிவகங்கை, செப்.15-

சிவகங்கையில் இதர பிற்படுத்தப்பட்டோர், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கான PM-YASASVI Top Class Education in Schools for OBC, EBC & DNT Students கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ், தகுதியான மாணவர்கள் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் தெரிவித்துள்ளார்.



ஒன்றிய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ், 2026 27 கல்வியாண்டில் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் பட்டியலிடப்பட்டுள்ள Top Class Schools பள்ளிகளில் 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் தகுதியான மாணவ, மாணவியர்கள் புதியதாகவும், புதுப்பித்தலாகவும் விண்ணப்பிக்கலாம்.

இத்திட்டத்தில் கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணமாக ஆண்டுக்கு அதிகபட்சமாக 9 மற்றும் 10-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.75,000 வரை, 11 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.1.25 லட்சம் வரை கல்வி உதவித்தொகை வழங்கப்படும். இதில் 30 சதவீத இடங்கள் மாணவியர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் OBC, EBC அல்லது DNT பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.2.50 லட்சத்தை மிகக்கூடாது. மேலும், 2025 26 கல்வியாண்டில் 100 சதவீத தேர்ச்சி பெற்று, தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் ஒன்றிய அரசால் வெளியிடப்பட்ட பட்டியலில் இடம்பெற்றுள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்களாக இருக்க வேண்டும்.

புதுப்பித்தல் விண்ணப்பம்

2025-26ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற்ற மாணவ, மாணவியர்கள், தற்போது 10 மற்றும் 12-ஆம் வகுப்புகளில் பயிலும் நிலையில், 30.09.2026க்குள் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் புதுப்பித்தல் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்.

புதிய விண்ணப்பம் 2026 -27 கல்வியாண்டில் 9 மற்றும் 11-ஆம் வகுப்புகளில் புதிதாக விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான மாணவர்களுக்கான விண்ணப்ப தேதி, தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் பின்னர் அறிவிக்கப்படும்.

விண்ணப்பிக்கவும், கூடுதல் விவரங்களை அறியவும் https://scholarships.gov.in இணையதளத்தை பயன்படுத்தலாம் என மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் தெரிவித்துள்ளார்.



■ குன்னூர் உழவர்சந்தையில் விநாயகர் சதுர்த்தி திருநாளன்று வெற்றி விஜய கணபதி பிரதர்சனம் செய்யப்பட்டது அதனை தொடர்ந்து கணபதி ஹோமம் சிறப்பு அபிஷேகம் அலங்காரம் தீபாராதனை நடைபெற்று திருக்கோவிலுக்கு வந்திருந்த பக்தர்களுக்கு உழவர் சந்தை விவசாயிகள் சார்பில் அன்னதானம் நடைபெற்றது.பிரதிஷ்டம் செய்யப்பட்ட சில வினாடிகளில் குன்னூர் சுற்றுப்புற பகுதிகளில் மழை பெய்தது



## தேனி போலீசார் தீவிர நடை ரோந்து குற்றத் தடுப்பு நடவடிக்கை

தேனி, செப்.15-

தேனி மாவட்ட காவல்துறையினர். பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம். உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பம்மலில் 14-ஆம் ஆண்டு ஆதியுமானவன் ஆன்மிக சங்கம் சார்பில் நடைபெற்ற ஸ்ரீவிநாயகர் சதுர்த்தி திருவிழா

பம்மல், செப்.15-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மல் பகுதியில் ஆதியுமனவன். ஆன்மிக சங்கம் சார்பில் நடைபெற்ற 14-ஆம் ஆண்டு ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி திருவிழா பக்தர்கள் திரளாக கலந்த கொண்டனர்.



பம்மல் இரட்டைப் பிள்ளையார் கோயில் அருகில் சிறப்பாக நடைபெற்ற இந்த விழாவில், விநாயகப் பெருமானுக்கு சிறப்பு பூஜைகள், அபிஷேகம் மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் சங்கத்தின் நிறுவன தலைவர் மக்கள் சேவகர் விஜயலட்சுமி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், கர்னல் நடராஜன் அவர்கள் கலந்து கொண்டு விழாவினை துவக்கி வைத்தனர்.

மேலும். கார்கில் போரில் வீர மரணம் அடைந்த. லெப்டினன்ட் ஜெனரல் பார்த்திபன். அவர்களின் நினைவாக ராணுவ உடையணிந்த விநாயகர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

விழாவிற்கான ஏற்பாடுகளை ஆதியுமானவன் ஆன்மிக சங்க நிர்வாகிகள் மற்றும் விழா குழுவினர். சிறப்பாக செய்திருந்தனர்.

மேலும்.சங்கத்தின். ஆலோசகரும் சங்கத்தின் உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் செந்தில்குமார். முன்னிலை வகித்தனர். இந்த நிகழ்வில், ஆதியுமானவன் ஆன்மிக சங்கத்தின் நிர்வாகிகள் ஹரி பாபு, சிங்காரவேலு, மல்லிகா பழனிவேல், சங்கத்தின் முன்னோடி ராஜு, பம்மல் தீபக், பைரவ தயாளன், தேன்மொழி செல்வராஜ் பம்மல் சிவா. உள்ளிட்ட பொதுமக்கள், பக்தர்கள் மற்றும் ஆன்மிக ஆர்வலர்கள் ஏராளமானோர் . கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்து, விநாயகப் பெருமானின் அருளைப் பெற்று சென்றனர்



■ குன்னூர் அருள்மிகு விநாயகர் திருக்கோவிலில் விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு அருள்மிகு விநாயகருக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.இதில் பக்தர்கள் திரளாக பூஜையில் கலந்து கொண்டு விநாயகர் தரிசனம் பெற்றனர்.பிறகு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.



## வீரவலசையில் வீரசக்தி விநாயகர்பசுபதி விநாயகர் கோவில்களில் விநாயகர் சதுர்த்தி விழா

சிவகங்கை, செப்.15-

சிவகங்கை மாவட்டம் வீரவலசை கிராமத்தில் அருள்பாலித்து வரும் வீரசக்தி விநாயகர் மற்றும் பசுபதி விநாயகர் கோவில்களில் 5-ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவையொட்டி பெண்கள் ஒரே மாதிரியான சீருடை சேலைகள் அணிந்து, கும்மி அடித்து குலவையிட்டு பாரம்பரிய முறையில் சிறப்பு வழிபாடுகளில் கலந்து கொண்டனர்.

விநாயகருக்கு கொழுக்கட்டை, சுண்டல், தேங்காய், பழம், அவல், பொறிகடலை உள்ளிட்ட நைவேத்தியங்கள் படைக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

விழாவின் நிறைவாக பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை சைவ உணவு அன்னதானமாக வழங்கப்பட்டது.

விழா ஏற்பாடுகளை வீரவலசை கிராம பொதுமக்கள் மற்றும் மாமன்னர் மருதுபாண்டியர் இளைஞர் பேரவை நிர்வாகிகள் இணைந்து செய்திருந்தனர்

## அரும்பாக்கம் கிராமத்தில் சுகாதார சீர்கேட்டால் நோய்கள் பரவும் அச்சத்தில் பொது மக்கள்

திருத்தணி, செப்.15-

திருவாலங்காடு ஒன்றியம் அரும்பாக்கம் கிராமத்தில், 250க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. ஊராட்சி நிர்வாகம் சார்பில் குடிநீர், சாலைகள், தெருவிளக்கு உள்ளிட்ட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. இருப்பினும், கிராமத்தில் கழிவுநீர் கால்வாய்கள் அமைக்கப்படாததால் வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் குடியிருப்புகளுக்கு அருகில் தேங்கி நிற்கிறது. மேலும், ஊராட்சி நிர்வாகம் சார்பில் தெருக்களில் குப்பை கழிவுகள் முறையாக அகற்றாததால், குப்பைகள், செடி கொடிகள் வளர்ந்து கொசு உற்பத்தியாகி வருகிறது.

வானிலையில் மாற்றம் ஏற்பட்டு சளி, காய்ச்சல், வயிற்றுப்போக்கு ஏற்பட்டு குழந்தைகள் முதல் முதியோர் வரை பாதிக்கப்பட்டு வரும் நிலையில் கிராம மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். கிராமத்தின் தூய்மை மற்றும் சுகாதாரம் உறுதிப்படுத்தும் வகையில் மழைநீர், கழிவுநீர் தேங்காமல், சாலையில் குப்பை கழிவுகளை அகற்றி தூய்மை உறுதிப்படுத்த மாவட்ட கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

## ரயில்வே தொழில் பழகுநர் நியமனத்தில் தமிழர்களின் வாய்ப்புகளை பிறருக்கு தாரைவார்ப்பதை தடுக்க வேண்டும்

சென்னை, செப்.15-

பாமக தலைவர் அன்புமணி நேற்று வெளியிட்ட அறிக்கை: தெற்கு ரயில்வேயின் தமிழக எல்லைக்குட்பட்ட பணிமனைகளில் தொழில் பழகுநர்கள் பயிற்சிக்காக 6,171 பேரை தேர்ந்தெடுப்பதற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இம்மாதம் 27-ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தொழில் பழகுநர் நியமன அறிவிக்கையில், தமிழக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருக்க வேண்டும் என்ற பிரிவு நீக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, தட்சிண கன்னடா பகுதி, ஆந்திராவின் நெல்லூர், சித்தூர் பகுதி மற்றும் கேரளாவில் இருப்பவர்களும், அந்தமான் நிக்கோபார், லட்சத்தீவு போன்ற பிற மாநிலங்களில் இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.



இதன் மூலம் தமிழக இளைஞர்களுக்கு கிடைக்க வேண்டிய தொழில் பழகுநர் பணி பிற மாநிலத்தவருக்கு தாரை வார்க்கப்படும் நிலை உருவாகியுள்ளது. இதை அனுமதிக்க முடியாது.

வழக்கமான விதிகளை புறந்தள்ளிவிட்டு, வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவிக்கையின் மூலம் தமிழகத்தில் உள்ள தொழில் பழகுநர் பயிற்சி இடங்களை பிற மாநிலத்தவருக்கு தாரைவார்க்க தெற்கு ரயில்வே முயற்சி செய்வது கண்டிக்கத்தக்கது.

கால் நூற்றாண்டுக்கும் மேலாக தெற்கு ரயில்வே துறையில் உள்ள பணிகளை பிற மாநிலத்தவர் பறித்துக்கொள்கின்றனர். தொழில் பழகுநர் வாய்ப்புகளும் அதே போல் பறிக்கப்பட்டு வந்த நிலையில் தான், நீண்ட போராட்டத்தின் மூலம் 2019-ம் ஆண்டில் தமிழக இளைஞர்களின் வேலைவாய்ப்பு உரிமை மீட்டெடுக்கப்பட்டது.

அந்த உரிமைக்கு தான் இப்போது மீண்டும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. தமிழக இளைஞர்களின் தொழில் பழகுநர் வாய்ப்புகளை பறிக்கும் நோக்கம் கொண்ட அறிவிக்கையை தெற்கு ரயில்வே உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

தமிழக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தவர்கள் மட்டும் தான் இந்த பணிக்கு விண்ணப்பிக்க முடியும் என்ற விதியை சேர்த்து புதிய ஆள்தேர்வு அறிவிக்கையை தெற்கு ரயில்வே புதிதாக வெளியிட வேண்டும். இதற்காக ரயில்வே வாரியத்துக்கு தமிழக அரசு அழுத்தம் தர வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161